[2nd March 1964

தொழில்நுட்பத் தேர்வு

*126 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ல் இன்ஜினியரிங் பரிட்சை எழுதிய மாணவர்கள் எத்தனை பேர் ?

(இ) பரிட்சையில் தேர்வு பெற்றவர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (a) 983 (b) 717.

தஞ்சை மாவட்டத்தில் காலரா

*127 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் தஞ்சை மாவட்டத்தில் காலரா வியாதியால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் எத்தனை ?

(இ) காலரா வியாதி கண்டவர்கள் எத்தனை பேர் ? இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(உ) என்னென்ன தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) 587 கிராமங்கள்.

(இ) 1963-ல் 2,491 பேருக்குக் காலரா கண்டது ; 1,240 பேர் இறந்து போயினர்.

(உ) பஞ்சாயத்து யூனியன் பொது சுகாதாரப் பணியாளருடன் சேர்ந்து பணிபுரிய மாநிலக் கொள்ளை நோய்த் தடுப்புப் பிரிவிலிருந்து சுமார் 30 ரிசர்ச் சுகாதார இன்ஸ்பெக்டர்கள் இந்த மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டனர். காலரா நோயால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் 6,18,702 பேருக்குக் காலரா தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. மேற்பார்வை இடவும் தடுப்பு முறைகளை மேற்கொள்ளவும் மாவட்ட சுகாதார அதிகாரிக்கு உதவியாக இருக்க தலைமை இடங்களிலிருந்தும் விசேஷ சுகாதார அதிகாரிகள் அனுப்பப்பட்டனர். மக்கள் அனைவருக்கும் காலரா தடுப்பு ஊசி போடும் இயக்கத்தைத் தீவிரப் படுத்துதல் பாதிக்கப்பட்ட வீடுகள், பொருள்கள், துணிகள் இவற்றில் மருந்து தெளித்தல் குடிநீரில் குலோரின் கலத்தல், காலரா நோயைப்பற்றி பொதுமக்களுக்கு எடுத்துரைத்தல், காலரா கண்டவர்களை அண்மையில் உள்ள மருத்துவ மனைகளில் தனியே வைத்துச் சிகிச்சை செய்தல், பாதிக்கப்பட்ட இல்லங்களைத் தனியே ஒதுக்குதல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டன.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தக் காலரா நோய் வரக்காரணம் என்ன என்று அரசாங்கம் ஆராய்ந்தார்களா ?

2nd March 1964]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பாதுகாக்கப்பட்ட குடி நீர்த்திட்டம் பல இடங்களில் இல்லாததினுல்தான். குடிதண்ணீரினுல் வருகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காலரா நோய் பரவுவதைத் தடுக்கிற நிலை தற்போது எப்படியிருக்கிறது என்பதை அறியலாமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : லேட்டஸ்ட் ரிப்போர்ட் படி குறைந்துதான் இருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, நடந்த ஆறு வார காலத்திற்குள்ளாக காலரா நோய் காரணமாக அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறார்கள் என்று இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னுல் வந்த செய்திமூலம் அறியப்படுகிறது. மேலும் அது பரவி மேலோங்கும் நிலைமையைத் தடுக்க என்ன வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : காவேரி ஆற்றிலிருந்து வரும் ஜலத்திற்கு ஆங்காங்கே ரிவர் பாங்க்ஸ் பாதுகாப்பதற்காக ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் போட்டு மக்கள் கண்டாமினேட்டட் வாட்டரை எடுக்க விடாமல் ஆங்காங்கே தடுப்பு போடப்பட்டிருக்கிறது. பிரச்சாரமும் செய்துகொண்டு வருகிறார்கள். தக்க நடவடிக்கைகள் எது எதெல்லாம் எடுக்கவேண்டுமோ அவைகளை எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கோ. சி. மணி : தஞ்சை மாவட்டத்தில் காலரா கண்டவர்களின் எண்ணிக்கையில் 50 சத விகிதம் வரை இறந்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவலிலிருந்து தெரிகிறது. இதிலிருந்து தற்காப்பு நடவடிக்கைகள் சரியானபடி எடுக்கவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் உணருகிறார்களா என்பதைத் தெரிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எடுத்த நடவடிக்கைகள் பற்றி மெயின் க்வெஸ்டினுக்கு ரிப்ளையாகக் கூறியாகி விட்டது இரண்டு நாட்களுக்கு முன்னர் டி.பி.எச். சென்று நேரில் பார்வையிட்டார்கள். விரைவில் ரிப்போர்ட்டு வரும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே தஞ்சை மாவட்டத்தில், இனிமேல் அதிகமாக காவேரியில் தண்ணீர் வராதாகையால் இந்த நோய் வருவதற்கே இடமிருக்காது என்று பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். அப்படியென்றுல் இனிமேல் இந்த நோயைத் தடுப்பதற்கு நடவடிக்கை தேவையில்லை என்று கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ?

MR. SPEAKER : How can the Minister for Works pass on secret information?

(பதில் இல்லை)

[2nd March 1964

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்லாமல் எங்கெங்கு ஆற்று நீரை குடிநீராக உபயோகிக்கிறார்களோ அந்த இடத்தில் எல்லாம் காலரா நோய் வருவதற்குக் காரணமாக இருக்கின்றது, ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் ஆற்று நீரைக் குடிக்கின்ற இடங்களில் எல்லாம் நேஷனல் வாட்டர் சப்ளை ஸ்கிமை அதிகமான அளவில் ஒரு ஸ்பெஷல் ஸ்கிமாகக் கொண்டுவந்து, அதிகமான பணத்தை இதற்கு ஒதுக்கு வதற்கு ஒரு வழிவகை செய்வார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே நாஷனல் வாட்டர் சப்ளை ஸ்கிமில் சேர்க்கப்பட்ட இடங்களில் எல்லாம் ஆரம்ப வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எங்கெங்கு ஓவர் ஹெட் டாங்குகளை அமைக்கவேண்டுமோ அந்த இடங்களில் எல்லாம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அது இயலாத இடங்களில் கிணறுகள் வெட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : சார், பல வருஷங்களாக நின்றிருந்த இந்த நோய் திரும்பவும் இந்த வருஷம் எல்லா இடங் களிலும் ஒரே நேரத்தில் பரவியிருக்கிறது. இந்த நோயைத் தடுப் பதற்கு சாதாரணமாக ஸலைன் மருந்து முக்கியமாகக் கொடுக்கப் படுகிறது. ஆனால் இப்போது அந்த மருந்து தாராளமாகக் கிடைப் பதில்லை. அதோடு கிடைக்கின்ற இடத்திலும் அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே அதிகமான அளவில், குறைந்த விலைக்குக் கிடைப்பதற்கு சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் பற்றி கவனிக்கப்படும்.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, ஒரு வட்டாரத்தில் காலரா பரவிய உடனேயே மற்ற பகுதிகளில் காலரா பரவுவதைத் தடுக்க முன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று பொதுநல ஊழியர்களும், சட்டமன்ற அங்கத்தினர்களும் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தும் தகுந்த முன் எச்சரிக்கை எடுக்கப்படவில்லை என்கின்ற புகார்கள் ஏதாவது கனம் அமைச்சர் அவர்களுக்கு வந்ததா ? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : முன் எச்சரிக்கையாக தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. முன்னெச்சரிக் கைகளை எல்லாம் மீறிதான் சில இடங்களில் நோய் பரவி விடுகிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்தக் காலரா நோய், வடாற்காடு மாவட்டத்தில், முக்கிய ஆறுகளாக இருக்கின்ற பாலாறு, செய்யாறு போன்ற . . .

2nd March 1964]

கனம் சபாநாயகர் : தஞ்சாவூர் மாவட்டமே இன்னும் முடியவில்லையே, அதற்குள் கனம் அங்கத்தினர் ஏன் வேறு மாவட்டங்களுக்குப் போகிறார்கள் ?

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், ஆரம்பத்தில் இந்த காலரா நோயினால் எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டார்கள் ? இப்போது புதிதாக எத்தனை பேர்களுக்குப் பரவியிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்கு தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ஆ. கு. சுப்பையா : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில், நல்ல குடிதண்ணீர் வசதியில்லாமல் இருப்பதின் காரணமாகத்தான் இந்த நோய் பரவுகிறது என்று சொன்னார்கள். அதைத் தடுக்கின்ற முறையில் எல்லா இடங்களிலும் ஓவர்-ஹெட் டாங்க் கட்டப்படுவதாகவும் சொன்னார்கள். ஆனால் இந்த ஓவர்-ஹெட் டாங்க் கிராமப்புறங்களிலோ அல்லது சேரிகளிலோ அதிகமாகக் கட்டப்படுவதில்லை. ஆனால் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு அதிகம் பேர் சேரிகளில்தான் செத்து இருக்கிறார்கள். ஆகவே முக்கியமாக சேரிகளில் இந்த ஓவர்-ஹெட் டாங்கைக் கட்டுவதற்கு சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எங்கெல்லாம் ஓவர்-ஹெட் டாங்க் கட்ட முடியுமோ அந்த இடங்களில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது தவிர, சேரிகளில், கிராமங்களில் எல்லாம் இருக்கின்ற ஆறுகளில் க்ளோரின் போட வேண்டும் என்று கூறும்போது, அங்குள்ள மக்களே அதைத் தடுக்கிறார்கள். அப்படிப் போட்டால் இந்த வாசனையின் காரணமாக தண்ணீரை உபயோகிக்க முடியாது என்று அவர்கள் குறைப் பட்டுக் கொள்கிறார்கள்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காலரா வந்தவர்களை, தனியாக வைத்து சிகிச்சை செய்வதற்கு வசதியில்லை என்று எந்த மருத்துவ மனையிலிருந்தாவது தகவல் வந்ததா ? அப்படியென்றால் அதன்பேரில் டெம்பரரி ஷெட் போட்டுக்கொள்ளும்படி உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இவ்விதம் தகவல் வந்தது தஞ்சாவூரிலிருந்து அல்ல, திருச்சியிலிருந்து அங்கேயுள்ள முனிசிபல் ஆசுபத்திரியில் இடம் இல்லை. மக்கள் அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது, தரையில் கூட நோயாளிகளைப் படுக்கவைத்து சிகிச்சை செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. பின்னர் ஷெட் போடும்படி கமிஷனருக்குத் தெரிவிக்கப்பட்டது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் காலரா தடுப்பு வேலைகளில் அங்கேயுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் ஒத்துழைக்கவில்லை என்று சுகாதார உதவி டைரக்டர்

அவர்கள் பத்திரிகையில் அறிக்கை கொடுத்திருந்தார்கள். கலெக்டர் அவர்கள் அவ்வாறு அறிக்கை கொடுத்தது தவறு என்று கூறினர்கள். எது எப்படியிருந்த போதிலும், இப்போது திருச்சியில் காலரா நோய் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது, ஆகவே இதைத் தடுக்க அதிகாரிகள் அதிகமான அளவில் அக்கறை காட்டுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பொதுவாக எல்லா இடங்களிலும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு இல்லாததினல் தான் இந்த நோயே பரவிக்கொண்டிருக்கிறது. அந்த முறையில் பார்த்தால் திருச்சியில் பப்ளிக் ஹெல்த் அஸிஸ்டன்ட் டைரெக்டர் அவர்கள் சொன்னது ஓரளவுக்கு உண்மை என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ம. கமலநாதன்: பாதுகாக்கப்பட்ட குடி-தண்ணீர் இருந்தால் இந்த நோய் வராது என்று அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். அதோடு எல்லா இடங்களிலும் ஓவர்-ஹெட் டாங்க் கட்டுவதற்கும் உத்தரவு போட்டிருப்பதாகச் சுலபமாக சொல்லி விட்டார்கள். ஓவர்-ஹெட் டாங்க் கட்டவேண்டும் என்றல் சுமார் 20 ஆயிரம் அல்லது 30 ஆயிரம் ரூபாய் வேண்டும். இதற்குக் கொடுக்கவேண்டிய கன்ட்ரிப்யூஷனைக் கொடுக்க முடியாமல் தான் பல பஞ்சாயத்துகளிலும் சாங்ஷன் ஆகியும் கூட ஓவர்-ஹெட் டாங்க் கட்டப்படாமல் இருக்கிறது. அதோடு போடபிலிடி டெஸ்ட் செய்து முடிவு சொல்வதற்கு ஒரு வருஷம், இரண்டு வருஷம் ஆகிறது. ஆகவே, சுகாதார அமைச்சர் அவர்கள் சமுதாய நல அமைச்சர் அவர்களோடு கலந்து புதிதாக ஒரு திட்டத்தைத் தயாரித்து, ஓவர்-ஹெட் டாங்க்களைக் கட்டுவதற்கும், சீக்கிரமாக டெஸ்ட் சாங்ஷன் ஆவதற்கும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எல்லா இடங்களிலும் ஓவர்-ஹெட் டாங்க் கட்டுவதற்கு உத்தரவு போட்டிருக்கிறேம் என்று நான் சொல்லவில்லை. முக்கியமாக பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. கிணறுகள் வெட்டப்படுகின்றன. தண்ணீர் வராத இடங்களில் டாங்க் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பது உண்மைதான். அதைச் சுலபமாகச் சொல்லிவிடவில்லை. உண்மையாக, கட்டிக் கொடுக்கவேண்டும் என்று நினைத்துத்தான் சொல்லப்பட்டது.

கனம் சபாநாயகர்: சுலபமாகக் கட்டிவிட முடியாது, கஷ்டப் பட்டுத்தான் கட்டவேண்டும்.

திரு. க. ர. நல்லசிவம்: தமிழகத்தில் உள்ள ஆறுகளில் முக்கியமானது காவேரி. இந்த ஆறு பாயும் இடங்களில் தான் அதிகமாக இந்தக் காலரா நோய் பரவியிருப்பதாக சொல்லப்படுகிறது. அப்படியானல் இந்த காவேரி தண்ணீரில் காலரா பூச்சிகள்

2nd March 1964]

ஏதேனும் இருக்கிறதா என்று அரசாங்கம் ஆராய்ந்து பார்த்ததா? இல்லையென்றால் ஏதாவது இதன் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : முதல் முதலாக, நாகப்பட்டினத்தில் நடந்த வேளாங்கன்னி உற்சவத்திற்கு வந்த சிலருக்கு காலரா கண்டுபரவியது தான். அங்கு ஆரம்பித்த நோய் அங்குள்ள மக்கள் மூலமாக ஓடிக்கொண்டிருக்கின்ற காவேரி ஆற்று நீர் அசுத்தம் செய்யப்பட்டு பல இடங்களிலும் பரவியது. இந்த ஆற்று நீரில் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் குளிப்பது, வேறு அசுத்தம் செய்வது இப்படிப்பட்ட காரணங்களினால் எல்லா இடங்களுக்கும் பரவியது. இதைப்பற்றி பப்ளிக் ஹெல்த் டைரெக்டர் அவர்களின் ரிப்போர்ட் இருக்கிறது. அதை அரசாங்கம் பரிசிலித்துக்கொண்டிருக்கிறது.

கனம் சபாநாயகர் : காலரா கிருமிகள் தண்ணீரில் எதிர்த்துப் போகுமா என்றுதான் ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டும்.

திரு. எஸ். பொன்னுசாமி : இந்தக் காலரா நோய் பரவியதின் காரணமாக நம் நாட்டிலிருந்து பிற நாட்டிற்கு சரக்கு அனுப்புவதில் கூட தடை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதைப்பற்றி இன்டர் நேஷனல் ஹெல்த் கவுன்சிலுக்கு, அதாவது உலகத்திற்காக இருக்கும் சுகாதார ஸ்தாபனத்திற்கு எழுதி, இதைத் தடுக்க மருந்துகள் கண்டுபிடிக்க வேண்டும் என்று இந்திய சர்க்கார் கேட்டிருக்கிறதா, இதைப்பற்றி ஏதேனும் ஆலோசனை இருக்கின்றதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரி யோசனை ஒன்றும் தற்போது இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, நல்ல குடிதண்ணீர் வசதி இல்லாத காரணத்தினாலும், ஓவர்-ஹெட் டாங்க்கள் மூலம் நல்ல தண்ணீர் சப்ளை இல்லாததினாலும் லாரிகள் மூலம் தண்ணீர் சப்ளை கொடுக்க முடியாமல் இருப்பதின் காரணமாகவும்தான் இந்த நோய் வருவதற்கு இடம் ஏற்படுகிறது. ஆகவே இம்மாதிரியான வசதிகளை செய்து கொடுக்க ஏதாவது திட்டம் அரசாங்கம் வகுத்திருக்கிறதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : உடனடியாக அரசாங்கம் திட்டம் வகுக்கவில்லை. இதற்கென்று ஒரு திட்டம் கொண்டுவர வேண்டும் என்று அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் அதிகமான அளவில் ஓவர்-ஹெட் டாங்க் கட்டப்போவதாகச் சொன்னார்கள். ஆனால் இப்போது நாஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீம் எடுத்துவிட்ட காரணத்தினால் 100-க்கு 25 அங்கங்கேயுள்ள பஞ்சாயத்துக்கள் கொடுக்கவேண்டியிருப்பதால் பல இடங்களிலும் சாங்ஷன் ஆகியும் வேலை நடைபெறாத நிலையில் இருக்கிறது. ஆகவே நாஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீமை மீண்டும் அமல் நடத்தி, 100-க்கு 5 பங்கு கொடுத்தால் போதும் என்கின்ற

திட்டத்தைக் கொண்டு வந்தால் அங்கங்கே பல வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து இந்த நோயைத் தடுப்பதற்கு வழிவகை ஏற்படும். ஆகவே இதைச் செய்ய சர்க்கார் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நாஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீம் மத்திய சர்க்காருடைய பொறுப்பைச் சேர்ந்தது. கிராம மக்கள் 5 சத விகிதமாக பங்கு என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். ரூரல் வாட்டர் சப்ளை என்று வரும்போது 25 சதவிகிதமாக பங்கு கொடுக்கவேண்டும். இதைப்பற்றி வாட்டர் சப்ளை கமிட்டி மத்திய அரசாங்கத்திலிருந்து வந்தபோது சொல்லியிருக்கிறோம். அதனுடைய ரிப்போர்ட் வந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

9-00 a.m. **திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, மாயவரம் டிவிஷன், குத்தாலம் மருத்துவ மனையில் காலரா கண்டவர்களைத் தனியாக வைத்து வைத்திய வசதி செய்ய இடம் இல்லாமல் தனியாக கீற்றுக் கொட்டகை போட்டு வைத்திய வசதி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : காலரா கண்டவர்களைத் தனியாக வைத்துத்தான் சிகிச்சை கொடுக்கவேண்டும். கீற்றுக் கொட்டகையில் வைத்து சிகிச்சை கொடுப்பது சரி தான்.

திரு. அ. ப. அழகமுத்து : திருச்சி மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன் ஒத்துழைக்கவில்லை என்று பத்திரிகைக்குச் செய்தி கொடுத்தது உண்மை என்று . . . (கனம் சபாநாயகர்: ஓரளவுக்கு) ஓரளவுக்கு உண்மை என்று அமைச்சர் கூறினார்கள். அப்படிக் கூறியது உண்மையாக இருந்தால் பஞ்சாயத்து யூனியன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புவதோடு, பஞ்சாயத்து யூனியன் தங்களுக்குப் போதுமான மருந்து சப்ளை உரிய காலத்தில் கிடைக்கவில்லை என்று குற்றம் சாட்டுகிறார்களே, அதற்கு என்ன பதில் சொல்லுகிறார்கள் என்றும் அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்த மருந்துகளெல்லாம் உடனடியாக சப்ளை செய்யவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம் ; சப்ளை செய்து கொண்டும் வருகிறார்கள்.

திரு. எம். எஸ். மணி : சார், திருச்சி நகரத்தில் சமீபத்திலே ஏற்பட்ட காலராவை யார் தடுப்பது என்று நகராட்சி மன்றத்திற்கும் அங்கு இருக்கிற டி.எம்.ஓ.-வுக்கும் தகராறு ஏற்பட்டு அதனால் பலர் பாதிக்கப்பட்டார்கள். அது குறித்து திருச்சி நகராட்சியில் டி.எம்.ஓ.-வை மாற்றவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி அந்தத் தீர்மானத்தை கனம் அமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தகராறு ஒன்றும் ஏற்படவில்லை. நானே நேரில் போய் விசாரணை செய்து வந்திருக்கிறேன். டி.எம். ஓ. அவர்கள் பேஷண்டுகள் வரும்போது அட்மிட் செய்ய வேண்டிய நிலையில் இருந்ததால் அட்மிட் செய்திருக்கிறார்.

2nd March 1964]

அங்கு அதிகமான பேஷண்டுகளை அட்மிட் செய்திருந்ததால் சில பேஷெண்டுகளைத் தரையில் போட்டிருந்தார்கள். தரையில் போட்டது குற்றம் என்று பஞ்சாயத்து யூனியன் தலைவர் போய்க் கேட்டிருக்கிறார். முனிசிபாலிட்டியில் ஷெட் போட்டால் ஷெட்டுக்கு தரையில் உள்ளவர்களை ட்ரான்ஸ்பர் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார். அப்போது முனிசிபல் பேஷெண்ட்ஸ், நான்-முனிசிபல் பேஷெண்ட்ஸ் என்ற பிரச்னை வந்தது. பேஷெண்ட்ஸ் ஸீரியஸ் கண்டிஷனில் வந்தால் அட்மிட் செய்யும்போது எப்படி முனிசிபல் பேஷெண்ட்ஸ், நான்-முனிசிபல் பேஷெண்ட்ஸ் என்று பார்ப்பது என்று டி.எம்.ஓ. குறை. இந்தச் சிறிய சங்கடத்திற்காக டி.எம்.ஓ-வை மாற்றவேண்டிய அவசியமில்லை. இப்போது ஏ.டி.பி.எச். போய் இந்தச் சங்கடத்தைத் தீர்த்து வைத்துவிட்டு வந்திருக்கிறார் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: திருச்சி மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன் மருந்துகள் வாங்க முயன்றும் குறிப்பிட்ட மருந்துகள் கிடைக்காத காரணத்தினால், கால தாமதம் ஏற்பட்டு அதை நிவர்த்தி செய்ய அக்கம் பக்க மாவட்டங்களுக்குச் சென்று வாங்கி சப்ளை செய்திருக்கிறார்கள். மருத்துவ அதிகாரி பஞ்சாயத்து யூனியனில் கவனிக்கவில்லை என்று எழுதியிருப்பது பொருத்தமில்லை என்று கருதுகிறேன். அதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: மருந்து வாங்கியது, சிகிச்சை செய்தது சரிவரச் செய்யவில்லை என்று எழுதவில்லை. அவருடைய லிமிட்டை எக்ஸீட் செய்ததையும், அவருடைய ஆக்ஷனையும் பஞ்சாயத்து யூனியன் ஆக்ஷனையும் ரேட்டிஃபை பண்ணவேண்டுமென்று வந்திருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: தற்போது முனிசிபல் ஏரியாக்களில் இந்தமாதிரி தொத்து வியாதி கண்டவர்களை வைத்து சிகிச்சை செய்ய காம்ப் இருக்கிறது. பஞ்சாயத்து ஏரியாக்களில் அத்தகைய வசதி இல்லாமல் இருப்பதால் பஞ்சாயத்து யூனியன் ஏரியாக்களிலும் தொத்து வியாதி கண்டவர்களை வைத்து சிகிச்சை செய்ய காம்ப்கள் அமைக்க அரசாங்கம் மான்யத்தொகை அளிக்க முன் வருவார்களா ?

கனம் சபாநாயகர்: ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் அந்த முனிசிபாலிட்டி ஏரியாவிலா ?

திரு. டி. கார்ச்சா கவுடர்: தனியாக . . . ஆங்காங்கு.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எந்த எபிடெமிக்கும் வராமலே இருக்க தடுப்பு முறைகளை அரசாங்கம் தீவிரமாக எடுத்துச் செய்கிறார்கள். இனிமேல் இத்தகைய வியாதிகள் வரக்

[2nd March 1964

கூடாது என்பது எனது எண்ணம். ஆங்காங்கு ஷெட் போட்டு வியாதியைய எக்ஸ்பெக்ட் பண்ணுவது நல்லதல்ல என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர்: நோய் கண்டவர்களை முனிசிபல் ஆளா அல்லது பஞ்சாயத்து ஆளா என்று பார்த்துக்கொண்டிருந்தால் ஆளே க்ளோஸ் ஆகி விடுவான் போல இருக்கிறது. ஆகையால் தயவுசெய்து முனிஸிபாலிட்டியானாலும் ஹெல்த் டிபார்ட்மெண்ட மூலமாகக் கீற்றுக் கொட்டகை போட்டால் என்ன? அந்த முறையில் ஹெல்த் டிபார்ட்மெண்ட்டுக்கு ஒப்படைக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எபிடெமிக் வரும்போது முனிஸிபாலிட்டி உடனடியாகச் செய்யக்கூடிய விஷயம். அங்கு ஹெல்த் ஆஃபீஸர் இருக்கிறார். கலந்து வேண்டியதைச் செய்யலாம். தனியாக ஹெல்த் டிபார்ட்மெண்ட் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஆர். ரங்கசாமி: காலரா வராமல் இருக்க ஷெட் போடாமல் இருக்கலாம் என்று கூறினார்கள். சிக்குகளே வராமல் இருக்க ஆஸ்பத்திரியே கட்டாமல் இருக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினர்கள் எக்ஸ்பான்ஷன் ஆஃப் ஹாஸ்ப்பிட்டல் பில்டிங்ஸ் பெட் ஸ்ட்ரெங்த் எல்லாம் கேட்காமல் இருந்தால் வியாதிகளே வராது என்று நினைக்கிறேன்.

திரு. ஆ. துரையரசன்: தலைவர் அவர்களே, அறந்தாங்கி வட்டாரத்தில் ஆவுடையார் கோவில் கூட்டு மன்றத்திற்குச் சொந்தமான அம்மாப்பட்டணம், வீச்சூர், மூலவயல் போன்ற இடங்களில் முன்னெச்சரிக்கையாக இருந்தும் காலரா ஏற்பட்டபோது மருந்துகள் கிடைக்காத காரணத்தினால் அம்மாப்பட்டணத்தில் 9 பேரும் வீச்சூர் போன்ற இடங்களில் 5-6 பேர்களும் மொத்தம் 15 பேர்களுக்கு மேல் இறந்திருக்கிறார்கள். முன்னெச்சரிக்கையாக மருந்துகளைத் தயாரித்து வைத்துக்கொள்ள இலாகாவினருக்கு அரசாங்கம் உத்திரவு போட முன் வருவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இன்றைக்கு அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு நான் பதில் கொடுத்தேன். மருந்தெல்லாம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: தலைவர் அவர்களே, இங்கே நடக்கும் கேள்வி பதிலிருந்து என்ன புரிகிறது என்று கேட்டால் . (கனம் சபாநாயகர்: உங்களுக்கு என்ன வேண்டுமென்று கேளுங்கள், என்ன புரிகிறது என்று சொல்ல வேண்டாம்) காலரா கண்ட இடத்தில் பஞ்சாயத்து யூனியன் சரியாக ஒத்துழைக்க

2nd March 1964]

வில்லை என்று பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்ட்டும், பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்ட் ஒத்துழைக்கவில்லை என்று ஒரு இடத்திலிருந்தும் புகார் வந்து கொண்டிருக்கிறது. இந்த இரண்டுக்கும் இடையில் வியாதி வந்தவன் செத்துப் போகக்கூடாது. இன்றென்று சாதாரணமாக மக்கள் வியாதி தங்களை அண்டக்கூடாது என்று வியாதி கண்ட இடங்களில் ஒரு வேளை மனளன் ஒருவனுக்கு வியாதி ஏற்படுவதாக இருந்தாலும் மனைவி போகக்கூடாது என்று சொல்லுவது இயல்பு. அதாவது சுருங்கச் சொன்னல் வியாதி கண்டவர்கள் செத்துப் போகக்கூடாது. டிபார்ட்மெண்ட் பஞ்சாயத்து யூனியனைக் குறை சொல்லுவதையும், பஞ்சாயத்து யூனியன் டிபார்ட்மெண்ட்டைக் குறை சொல்வதையும் நிறுத்தி மக்கள் சுபிட்சமாக வாழ வழிவகை செய்ய மந்திரி அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நிறுத்திக் கொள்கிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினருக்கு நன்றி.

திரு. இரா. நாராயணன் : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தில் லப்பைகுடிக்காடு கிராமத்தில் காலரா நோய் கண்டது. அங்குள்ள மக்கள் முஸ்லிம் மக்கள். அவர்களை அடுத்த மாவட்டத்திற்கு எடுத்து வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. கிராமத்திலேயே ஒரு கொட்டகை போட்டு அவர்களுக்கு சிகிச்சை செய்ய அரசாங்கம் முன்வராத காரணம் தெரிய வேண்டும். அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினருடைய கேள்வி எனக்குப் புரியவில்லை.

கனம் சபாநாயகர் : ஒரு சின்ன கிராமத்தில், அதாவது லப்பைகுடிக்காடு என்ற கிராமத்தில் ஷெட் போடவில்லையாம். அதற்குக் காரணம் என்ன என்று கேட்கிருர்.

திரு. ஆ. கு. சுப்பையா : காலரா வியாதி வருவதற்கு மற்றொரு காரணம் சொல்லுகிருர்கள். பஞ்சகாலத்தில் பிழைக்க ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து படை படையாக தஞ்சைக்கு வருகிருர்கள். அவர்கள் பலவகையான உணவுகளைச் சாப்பிடுவதன் காரணமாக, சுகாதார கெடுதலான நிலை ஏற்பட்டு நோய் வருவதாகச் சொல்லுகிருர்கள். அதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் தாழ்மையாக ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காலரா கொடிய வியாதி. அது அதிக நேரம் நீடிக்க இடம் கொடுக்கக் கூடாது.

கனம் சபாநாயகர் : அதிக நேரம் இதைப் பற்றிப் பேசினல் ஜாஸ்தி ஆபத்து என்று கனம் முதலமைச்சர் சொல்லுகிருர் . . . . அதனல் அடுத்த கேள்வி 128-வது கேள்வி.